முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1523

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.11.2023**, வியாழக்கிழமை

1. ஞான சொரூபமே கலியுக ஞானியே
ஞானிகளை வணங்கும் நல்வாய்ப்பு தந்து உலகோர்க்கு
ஞானம் அருளுகின்ற ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே சோபகிருது தேள்திங்கள்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 14 ம் நாள், 30.11.2023, வியாழக்கிழமை)
வானவர்கள் வியந்து நோக்குகின்ற
வாழுகின்ற கலியுகத்தின் சிறந்த ஞானி நீ
3. ஞானி உன் நாமஜெபம் போற்ற
ஞாலமதில் உலகோர்க்கு புண்ணியம் வேண்டும்
ஞானிகள் பூஜை உன்னோடு சேர்ந்து செய்ய
ஞாலமதில் உலகோர்க்கு வரம் வேண்டும்
4. வேண்டியே இந்த அற்புதத்தை வினவிட எளிமைபட உலகோர்க்கு
தொண்டாக உயர்சேவையாக திடமுற ஆற்றுகின்ற அரங்கனே
அரங்கனே உன்னுள் யானிருந்து
அற்புதம் நடத்த அகிலமாற்றம் ஞானவழி நடப்பது உறுதி
5. உறுதிகொண்டு உன் தர்மத்தை காத்து வருகின்றேன்
உலகோரெல்லாம் தர்மபாதை வழிவந்து
உலைக மீட்கும் உன்னதமான உன் சுத்தசைவ நெறிகொண்டு
உயர்வாக அவரவர்கள் ஞானவானாய் சிறந்து
6. சிறந்துமே இந்த பேருலகம் ஞான ஆட்சி
சித்தி மிக்க சித்தர்களின் ஆட்சிக்காலமாக
வரம் கூடி சடுதி மாற்றம் நிகழும்
வடிவேலன் யான் உன் வழி அற்புதம் நிகழ்த்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–